# ஆலய வழிபாட்டில் வாத்திய இசைமரபு

**ஹம்ஸவதி ஜெகதீஸ்வரன்**[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*ஆலயம் என்பது ஆன்மா லயப்படும் இடமாகும். அதாவது அலைகின்ற மனதைப் பக்குவப்படுத்தி வயப்படுத்தும் இடம் எனப்பொருள் தருகின்றது. அமைதியையும் தூய்மையையும் எடுத்துக் காட்டும் பக்தி நிலையங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. இசை வழியே இறைவனைக் கண்டவர்கள் நம் முன்னோர்கள். இசையானது மிடற்றிசை என்றும் கருவியிசை என்றும் இருவகைப்படும். மனிதனது குரல்கூட ஒரு இசைக்கருவிதான். அதைக் காத்திர வீணை என்றும் கூறுவர். குரலிசைக்குத் துணையாக இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. தனியாகவும் இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. அந்தவகையில் ஆலய வழிபாட்டில் வாத்திய இசைமரபு பற்றிய இந்த ஆய்வில் இசைக்கருவிகளின் வகைகள், ஆலய வழிபாட்டில் வாத்திய இசைமரபின் தோற்றம் மற்றும் தொன்மை, ஆலய வழிபாட்டில் வாத்திய இசையின் பங்களிப்பு மற்றும் எவ்வாறு வாசிக்கப்படுகின்றன என்பது பற்றியும் இன்றைய உலகில் ஆலய வழிபாடுகளில் வாத்திய இசைமரபு பற்றியும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. இந்த ஆய்வானது வரலாற்றியல் ஆய்வு, விவரண ஆய்வு மற்றும் பகுப்பாய்வு முறையில்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அன்றும் இன்றும் கோவில்களின் இசை வழிபாட்டில் முன்னிலையில் இருப்பது நாதஸ்வர இசை ஆகும். பொழுது புலருங்காலத்து வழிபாடு முதற்கொண்டு இரவில் பள்ளியறைப் பூஜை வழிபாடு ஈறாகக் கோவில்களில் நாதஸ்வரக் குழுவின் இசை ஒலித்துக் கொண்டிருக்கும். அன்றாடப் பூஜை வேளைகளில் இசைப்பதற்கென்றும் திருவிழாக் காலங்களில் இசைப்பதற்கென்றும் தனித்தனியான மரபுகள் உருவாக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. எந்தெந்த இசைக்கருவி, எவ்வெவ்போது, தனித்தோ, சேர்ந்தோ இயங்க வேண்டுமென்றவொரு முறைமையும் இருந்திருக்கின்றது. நாதஸ்வரம், திருச்சின்னம், எக்காளம், முகவீணை, கொம்பு, புல்லாங்குழல், சங்கு, துத்தரி, மத்தளம், தவில், பேரிகை, பஞ்சமுக வாத்தியம், செண்டை, தப்பு, திமிலை, தாளம், சேமக்கலம், வீணை இவ்வாறு இறை வழிபாட்டில் இடம்பெறும் கருவிகள் பலவுண்டு. கிராம தேவதைகளின் வழிபாட்டில் உடுக்கை, பம்பை, கைச்சிலம்பு முதலியன இடம்பெறுகின்றன. காலப்போக்கில் பல கருவிகள் அருகிப் போக இன்று சில கருவிகள் மட்டும் தொடர்ந்து இசைக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்:** ஆலயம், இசைக்கருவிகள், மிடற்றிசை, கருவியிசை, ஆலய வழிபாடுகள்

[1] *இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
hamsavathyj@univ.jfn.ac.lk

**அறிமுகம்**

ஆலயம் என்பது அலைகின்ற மனதைப் பக்குவப்படுத்தி வயப்படுத்தும் இடம் எனப் பொருள் தருகின்றது. அமைதியையும் தூய்மையையும் எடுத்துக் காட்டும் பக்தி நிலையங்களாக இவ் ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயங்கள் வழிபாட்டிற்குரிய இடங்களாகவும், நுண்கலைக் கூடங்களாகவும் திகழ்கின்றன. இசையின் மூன்று கூறுகளான ஆடல், பாடல், கருவிகள் ஆகியன ஆலய வழிபாடுகளில் முதன்மை இடம்பெற்று விளங்குகின்றன. ஆதியில் சமயத் தொடர்புடைய கிரியைகளின் போது ஆடியும், பாடப்பட்டும் வந்த கலைகள் காலப்போக்கில் கோயிற் கலைகளாகி வளர்ச்சி பெறலாயின. மலரினாலும், இலையினாலும், மனத்தினாலும் வழிபடுதல் போன்று இசையினாலும், நடனத்தினாலும் இறைவனை வழிபடும் முறை நன்கு போற்றப்பட்டது.

தெய்வங்கள், இசைக்கருவிகள் மற்றும் ஆடலோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. சிவன் உடுக்கையுடனும், பிரம்மா தாளத்துடனும், கண்ணன் புல்லாங்குழலுடனும், சரஸ்வதி வீணையுடனும், நந்தி மத்தளத்துடனும், சிவன் வீணாகான தட்சணா மூர்த்தியாகவும் காட்சியளிப்பதில் இருந்து ஆலயத்திற்கும் வாத்தியக் கருவிகளுக்குமான தொடர்புகளை அறிய முடிகின்றது. ஆலய வழிபாடுகளில் இசையானது இரு வழிகளில் வழங்கப்படுகின்றன. அவை குரலிசை, வாத்திய இசை என்பனவாகும். இவற்றில் ஆலய வழிபாட்டில் வாத்திய இசை மரபு பற்றி இந்த ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இயற்கை தரும் இனிய ஒலிகளைக் கேட்டு கருவி இசை என்னும் அருங்கலை ஒன்றை ஆக்கி அக்கலை மரபை தொடர்ச்சியாகப் பேணிக் காத்தவர்கள் நம் முன்னோர்கள். இவ்வாறு முன்னைய காலத்திலும் தற்காலத்திலும் ஆலய வழிபாட்டில் பயன்படுத்திய, பயன்படுத்தப்படுகின்ற வாத்திய இசை மரபு பற்றி அறிந்து கொள்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். ஆலயங்களை பிரதானமாக்கி இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் மூலங்கள்**

முதல் நிலை மூலங்களாக நூல்களும், இரண்டாம் நிலை மூலங்களாக இணையத்தளங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வானது பகுப்பாய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இசைக்கருவிகளின் வகைகள்**

ஆலய பூஜை வேளைகளில் நால் வேதங்களும் மற்றும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்கின்ற பஞ்ச தோத்திரங்களும், நைமித்திய

பூஜை வேளைகளில் பன்னிரு திருமுறைகளும் பாடும் மரபும் உண்டு. இவற்றை ஓதும் போது குரல் வழி நிற்கும் யாழ், வீணை, தாளம், முழவு என்பன இசைக்கப்படுகின்றன.

திருக்கோயில் கிரியைகளின் போது சர்வ வாத்தியங்களும் ஒலிக்கும் மரபு உண்டு. இக் கருவிகள் 5 வகைகளில் அடங்கும். அவையாவன

1) பிருதுவி வாத்தியங்கள் - மரத்தினால் செய்யப்பட்டவை.
2) அப்பு வாத்தியங்கள் - சங்கு முதலிய கருவிகள்
3) ஆக்கினேய வாத்தியங்கள் - உலோகங்களால் ஆனவை.
4) வாயல்வ வாத்தியங்கள் - துளைகள் கொண்டவை.
5) ஆகாய வாத்தியங்கள் - ராக பேதங்களைக் காட்டுபவை. (நாதவாஹினி,2000:4)

**ஆலய வழிபாட்டில் வாத்திய மரபின் தோற்றம் மற்றும் தொன்மை**

ஆலயங்களில் காணப்படும் சிற்பங்கள், கற்றூண்கள், கல்வெட்டுக்கள், நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களால் பாடப்பட்ட பாசுரங்கள் என்பவற்றின் வாயிலாக இசை ஆலயங்களில் வளர்ச்சியுற்றமையையும் ஆலயங்களில் வாசிக்கப்பட்ட இசைக்கருவிகள் பற்றியும் அறியக் கூடியதாக உள்ளது. ஆலயங்களில் பயன்படுத்தப்பட்ட பல இசை வாத்தியங்கள் இன்று வழக்கத்தில் இல்லை. சிற்பங்களிலும் ஓவியங்களிலும் காணப்படுகின்ற பல கருவிகள் என்னவென்று கண்டுபிடிக்க முடியாமல் உள்ளன. எனினும் ஆலயங்களில் உள்ள பல மண்டபங்களுள் வாத்திய மண்டபம், வீணா மண்டபம், நிருத்த மண்டபம் ஆகியன அடங்குகின்றன. இதன் வாயிலாக ஆலயங்களில் வாத்திய மரபின் தொன்மையை அறியக்கூடியதாக உள்ளது.

மேலும் ஆலயங்களின் தளவாட அறிக்கைகளின் வாயிலாகவும் அக்கோயில்களில் இருந்த இசைக்கருவிகள் பற்றி அறியக்கூடியதாக உள்ளது. உதாரணமாக திருவாரூர் தியாகேசப் பெருமான் ஆலயத்திற்கு பதினெட்டுக் கருவிகள் உண்டு. மற்றும் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் வைகுந்த ஏகாதசி விழாவில் பகல்பத்து, இராப்பத்து நாள்களுக்கு கோயிலின் ஆஸ்தான இசைக்கலைஞர்கள் 18 வகை சிறப்பு வாத்தியக் கருவிகளை இசைத்தனர். அரங்கநாதர் கோயிலில் 1953 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட இசைத்திருந்த கருவிகள் பட்டியலில் பெரியமேளம்-1, மேளம்(தவில், தாளம், ஒத்து, நாயனம் 4 உருப்படிகள்)-3 ஜதை, அதிக நாயனம்-1, கவுரி காளை-2, திருச்சின்னம்-1, எக்காளம்-1, வீரவண்டி-1, சேமக்கலம்-1, சங்கு-1, மங்கல வாத்தியம்-1, நட்டு, முட்டு-2, சுத்த மத்தளம்-1, கொக்கை(உடுக்கை)-1, பெரிய கைத்தாளம்-1, பாரி-1 ஆகியவை இடம்பெற்றுள்ளன. (தினமணி, 2017)

இலங்கையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் ‘‘கலை ஈடுபாடு மிக்க குருக்களால் மாவிட்டபுரம் கோயிலில் கலை நிகழ்வுகளும், கதாபிரசங்கங்களும், இசைக்கச்சேரிகளும், கிராமிய நடனங்களும் நிகழ்த்துவிக்கப்பட்டன.’’ , ‘‘கோயிலில் ஆண்டு தோறும் ஈழத்தின்

சிறந்த நாதஸ்வரக் கலைஞருக்கு ‘தங்க நாதஸ்வரம்’ வழங்கி கௌரவிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி மங்கள இசை மரபு இலங்கையில் வளர உதவினார்.’’ என்றும், ‘‘ இலங்கையில் தவில்-நாதஸ்வர இசை முதன்முதலில் தோன்றிய தலம் இதுவே’’ (https://www.4tamilmedia.com/index.php/menu-spritual/59-spritual-notes/722-maavai) என்று குறிப்பிடப்படுவதில் இருந்து இலங்கையில் ஆலய வாத்திய மரபின் தொன்மையை அறிய முடிகின்றது.

சிற்பங்கள் என்பவை கல்லில், மரத்தில் அல்லது சுவரில் செதுக்கப்பட்ட உருவங்கள் ஆகும். கற்கோவில்களில் இசைக்கருவிகளின் பல்வேறு வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இடக்கை, உடுக்கை, கொக்கரை, குடமுழா, தமருகம், தக்கை, தாளம் போடும் கருவிகள், பேரிகை முதலிய இசைக்கருவிகளின் சிற்பங்கள் தென்னகக் கோயில்களில் காணப்படுகின்றன. நடனமாடிக் கொண்டிருக்கும் நங்கையரைச் சுற்றி யாழ், குழல், கின்னரம், முழவு வகைகள் முதலியவற்றை இசைப்போரின் சிற்பங்கள் காணப்படுகின்றன.

கங்கை கொண்ட சோழபுரம் கோயிலில் யாழ், குழல், தாளம், முழவு, உடுக்கை முதலிய வாத்தியக் கருவிகளைக் காணலாம். இராசசிம்மன் கட்டிய கைலாசநாதர் கோயிலில் 3 வகையான தம்புராக்கள் காணப்படுகின்றன. அகப்பைக் கின்னரி என்பது இக் கோயிலில் காணப்படுகிறது. மேலும் இங்கு குழல், வீணை, முரசு முதலிய சிற்பங்கள் காணப்படுகிறது. கன்னியாகுமாரி மாவட்டத்தில் உள்ள சுசீந்திரம் கோயிலில் பம்பை, செண்டை, முழவு, மத்தளம் முதலிய தோற்கருவிகளின் உருவம் காணப்படுகின்றது. கும்பகோணத்திற்கு அருகிலுள்ள தாராசுரம் கோயிலில் யானையின் முதுகிலிருந்து பேரிகையடிக்கும் காட்சியைக் காணலாம். திருஎருக்கம்புலியூர் கோயிலில் சம்பந்தருடன் கோயில்களுக்குச் சென்று யாழ் மீட்டிய யாழ்ப்பாணரின் கையில் ஒருவகை யாழ் காணப்படுகிறது. இது சகோடயாழ் ஆகும். இது கோடு எனும் உறுப்பினை கொண்டது. திருக்கோலக்கா கோயிலில் சம்பந்தர் பொற்றாளம் பெற்ற காட்சி சிற்பமாக காணப்படுகிறது. ‘‘மாதர் மடப்பிடியும்’’ எனும் யாழ்முரி அமைப்பை பாடியருளியதும் இங்கு தான்.

மேலும் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலில் பஞ்சமுக வாத்தியத்தை வைத்து வாசிக்கப்படும் ஒரு சிற்பம் காணப்படுகின்றது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சண்பகராம நல்லூரில் உள்ள கோயிலில் கருங்கல்லால் செய்யப்பட்ட இசைக் குழாய் ஒன்று காணப்படுகின்றது. குழாயின் உட்பக்கம் மிக வழவழப்பாய் மினுக்கம் உள்ளதாக இருக்கிறது. அக் குழாயின் ஒரு முனையை ஊதினால் எக்காளம் என்ற காற்று வாத்தியம் போலும், மறுமுனையை ஊதினால் சங்கு வாத்தியம் போலும் நாதம் வெளிவரும். கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயிலில் கல் நாதஸ்வரம் காணப்படுகின்றது. மேலும் திருநகரியில் உள்ள ஆழ்வார் கோயிலில் மாவுக் கல்லினால் செய்யப்பட்ட கல் நாதஸ்வரம் ஒன்று உள்ளது. இவற்றில் இருந்து ஆலய வழிபாட்டில் வாத்திய மரபின் தொன்மையை அறியக்கூடியதாக உள்ளது.

மேலும் இசை பற்றியும் இசைக்கு உதவியான வாத்தியங்கள் பற்றியும் வேதங்களில் கூறப்பட்டதை அறிகிறோம். இதற்கு ஆதாரமாக காஞ்சியிலிருக்கும் காமாட்சி கோயிலில் மைசூரில் இருக்கும் சாமூண்டீஸ்வரி கோயிலில் சிதம்பரம் ஆயிரங்கால் கல்வெட்டுக்கள் இன்னும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சேகரித்து வைத்து சென்னை பொருட்காட்சி சாலை, ஏட்டுச் சுவடுகள் எங்களுக்கு சான்றாக இருக்கின்றது.

கும்பகோணம் நாகேஸ்வர ஸ்வாமி கோயிலில் அகப்பட்ட செப்பேடு ஒன்றில் 30க்கு மேற்பட்ட பலவித வாத்திய உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இதில் கோயிலில் மட்டும் வாசிக்கப்படும் வாத்தியங்களும், மிகப் பழமையான சில வாத்தியங்களும் உள்ளன. ஏழு வகை தந்தி வாத்தியங்கள், ஏழு தண்ணுமை வகைகள், துளைக் கருவிகளில் சங்கு, குழல், தாரை, எக்காளம், நாதஸ்வரம் உட்பட ஒன்பது வகைகள் காணப்படுகின்றன.

யாழ், பதலை, முழவு, தூம்பு ஆகிய கருவிகளுடன் கடவுளைப் போற்றி வழிபட்டனர் என்ற செய்தியை பதிற்றுப்பத்து பாடல் தெரிவிக்கின்றது.

''புணர்புரி நரம்பின் தீந்தொடை பழுனிய
வணரமை நல்யாழிளையர் பொறுப்பப்
பண்ணமை முழவும் பதலையும் பிறவும்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவிற்றகைத்த துறை கூடு கலப்பையர்
கைவ லிளையர் கடவுட் பழிச்சி'' (பதிற்றுப்பத்து: 41:1-6)

இவ்வாறு ஆலயங்களில் காணப்படும் சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுக்கள், பாசுரங்கள் வாயிலாக ஆலய வழிபாட்டில் வாத்திய மரபின் தோற்றம் மற்றும் தொன்மையை அறியக்கூடியதாக உள்ளது.

**ஆலய வழிபாட்டில் வாத்திய இசையின் பங்களிப்பு**

கிரியாநெறி விளக்க நூல்கள் கோயில்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளின் பெயர்களைத் தருகின்றன. அவையாவன மத்தளம், காகனம், ஏகதாளம், பேரியாழ், நாடி வாத்தியம், கும்ப வாத்தியம், பஞ்சமுக வாத்தியம், வீணை, கின்னர வீணை, கிம்புரு வீணை, உருத்திர வீணை, முக வீணை, வாயு வீணை, தும்புரு வீணை, நாரத வீணை, காந்தர்வ வீணை, வேங்குழல், மிருதங்கம் முதலியன ஆகும். பிற்காலத்தில் நாதஸ்வரம், தவில், மேளம், தாளம், திருச்சின்னம், கின்னரி, கொம்பு, கெஞ்சிரா, பிரம்மதாளம், சேமக்கலம், எக்காளம், உடுக்கை, டமாரம், சுத்த மத்தளம், சூரியப்பிறை, சந்திரப்பிறை, திமிலி, நகரா, பறை ஆகியனவாகும். இங்கு குறிப்பிடப்பட்ட கருவிகளில் பல காலப்போக்கில் அருகிப்போக இன்று சில கருவிகள் மட்டும் தொடர்ந்து இசைக்கப்படுகின்றன. இவற்றுடன் மேலைத்தேய வாத்தியங்களான வயலின், கிளாரினெட் ஆகியனவும் இசைக்கப்படுகின்றன.

இன்று சகல இந்துக் கோயில்களிலும் கிரியை வேளைகளில் இசைக்கப்படுபவை மங்கல வாத்தியமாகிய நாதஸ்வரமும் பெரியமேளம் எனப்படுகின்ற தவிலுமாகும். இசைக்கருவிகளில் முக்கியமாக நாதஸ்வரம் ஆலய வழிபாட்டில் தொடக்கம் முதல் இறுதி வரை நீங்கா இடம் பெற்றுள்ளது. நாதஸ்வர கருவிகளில் பாரி, திமிரி என இரு வகைகள் காணப்படுகின்றன. இவற்றுள் இன்று வழக்கில் இருப்பது பாரி ஆகும். நாதஸ்வரத்தில் ஆலயக் கிரியைகளின் போது நவசந்திகளிலும் விதிக்கப்பெற்ற பண் வகைகளே வாசிக்கப்படுகின்றன. அவையாவன

1. பிரமசந்தி- மேகராகம்
2. இந்திரசந்தி- காந்த ராகம்
3. அக்கினி சந்தி- கொல்லி
4. யம சந்தி- கௌசிகம்
5. நிருதி சந்தி- நட்டபாடை
6. வருண சந்தி- சீகாமரம்
7. வாயு சந்தி- தக்கேசி
8. குபேர சந்தி- தக்கராகம்
9. ஈசான சந்தி- சாளபாணி (நாதவாஹினி,2000:5)

ஆலய நித்திய பூஜைகளில் திருவனந்தல் பூஜையிலிருந்து இரண்டாம் காலப் பூஜை வரை முறையே பூபாளம், வசந்தம், பிலஹரி, கேதாரம், தன்யாசி, அசாவேரி, சுத்தசாவேரி, ஆரபி, சுருட்டி, ஸ்ரீ, மணிரங்கு, முகாரி, மந்தாரி, பூர்விகல்யாணி, கல்யாணி ஆகிய ராகங்கள் நாதஸ்வரத்தில் இசைக்கப்படும். அர்த்தயாமப் பூஜையின் போது கம்பீரமானதும் சிங்காரமானதுமான ராகங்கள் வாசிக்கப்படும். பிரம்மோற்சவ காலங்களில் குழுக்களாக பல நாதஸ்வரங்கள் மேள தாளங்களுடன் இசைக்கப்படும். குறிப்பாக சுவாமி புறப்படும் போது நாதஸ்வரத்தில் ‘‘மல்லாரி’’ வாசிக்கப்படும். திருவிழா நாட்களில் சுவாமி அம்பாள் புறப்பாடு அல்லது வீதி உலா என்றாலே முதலிடத்தைப் பிடிப்பது ‘‘மல்லாரி’’ என்ற இசை வடிவமாகும். இது நாட்டை ராகத்திலும் பல தாளங்களிலும் அமைத்து இசைக்கப்படும். இதற்கு சாஹித்தியம் கிடையாது. சுவாமி வீதி வலம் வரும் வேளைகளில் நவசந்திகளிலும் வர்ணம், ராகம், பல்லவி, கீர்த்தனை, பதம், ராகமாலிகை ஆகிய உருப்படிகள் நாதஸ்வரத்தில் இசைக்கப்படுகின்றன. இறுதியாக சுவாமி திருக்கோயிலுள் புகும்போதும் மல்லாரி, மாலி என்பவை இசைக்கப்படும். இறைவன் திருவீதியுலாவிற்கு மட்டுமன்றி வேறு சில சந்தர்ப்பங்களிலும் ‘‘மல்லாரி’’ இசைக்கப்படும். கோயிலில் திருமடைப்பள்ளியிலிருந்து சுவாமிக்கு நைவேத்தியம் எடுத்து வரும் போது, அதற்கு மரியாதை செய்கிற பாங்கிலே மல்லாரி வாசிக்கப்படும். இதற்கு ‘‘தளிகை மல்லாரி’’ என்ற பெயருண்டு. இதே போல் இறைவனுக்கு நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் தீர்த்த மல்லாரி, கும்ப மல்லாரி, புறப்பாட்டு மல்லாரி போன்ற மல்லாரி வகைகள் இசைக்கப்படும்.

நாதஸ்வரத்தோடு ஆலய வழிபாட்டுக் காலங்களில் பெரும்பங்கு வகிப்பது தவில் ஆகும். வேறெந்த முழவுக் கருவிக்கும் இல்லாத ஒரு சிறப்பம்சம் இக்கருவிக்கு உண்டு. நாதஸ்வரம் வாசிப்பதற்கு முன் இவ் வாத்தியத்தில் சில ஆவர்த்தனம் வாசிக்கப்பட்ட பின்பு தான் நாதஸ்வரம் இசைக்கத் தொடங்கும். மேலும் கணித அடிப்படையிலான லய வேலைப்பாடுகள் இவ் வாத்தியத்திற்கே உரிய சிறப்பம்சமாகும். சுவாமி புறப்பாட்டின் போது மல்லாரி இசைக்கப்படும் முன் தவிலில் ''அலாரிப்பு'' என்ற ஒரு வகை வாசிக்கப்படும். இதற்கு ''மேளப்ராப்தி'' என பெயருண்டு. இது சதுஸ்ர ஏகத்தில் கண்டகதியை அமர்த்தி வாசிக்கப்படும். கும்பாபிஷேகம் யாகசாலை பூஜை போன்ற நிகழ்வுகளில் தவிற் கருவியை வைத்து பூஜை செய்து வழிபடுவதனை இன்றும் காணலாம்.

ஆலயத்தில் நாம் தினமும் கேட்கும் இசைவழங்கும் கருவி மணி ஆகும். குறிப்பாக கண்டாமணி, கொத்து மணி, கை மணி ஆகியன நித்திய மற்றும் நைமித்திய கிரியைகளின் போது ஒலிக்கப்படுகின்றது. சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் மணியும், சங்கும் ஒரே நேரத்தில் ஸட்ஜ, பஞ்சம ஸ்வரங்களுக்கு ஒலிக்கப்படும். திருவிழாக்காலங்களில் சுவாமி வீதி வலம் வரும் வேளையில் எக்காளம், திருச்சின்னம், கொம்பு வாத்தியங்கள் சிறப்பான இசையை வழங்குகின்றன.

பஞ்சமுக வாத்தியம் இன்று தஞ்சாவூரில் உள்ள திருவாரூரில் கோயிலிலும், திருத்துறைப் பூண்டிக் கோயிலிலும் இசைக்கப்படுகின்றது. இது அநேகமாக தனியாகவும், சுத்த மத்யம தாளத்துடனும் சேர்த்து இசைக்கப்படும். இக் கருவி பானை வடிவுள்ள குடமுழா ஆகிய பண்டைய இசைக்கருவியின் நிருத்திய வடிவமாகும். இதன் நடு மேளம் இறைவனது சத்யோயாதம் என்றும் மற்றைய நான்கும் அவனது மற்றைய முகங்களாகிய ஈசானம், தற்புருசம், அகோரம், வாமதேவம் எனவும் கருதப்படுகின்றது.

ஆலயங்களில் விசேட தினங்களில் சர்வ வாத்தியங்களும் இசைக்கப்பட வேண்டும் என்று காமிகாமம் விளக்குகிறது. வாத்தியத்ரயம் எனப்படுகின்ற வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் என்பன ஆலயங்களில் ஒலிக்கப்பட வேண்டும் என்பது மரபு. பிரதோஷ காலத்தில் இறைவன் நர்த்தனம் புரிவதாகச் சொல்லப்படுகின்றது. இந்த அடிப்படையில் திருக்கோயில்களில் பிரதோஷக்கால கிரியைகளின் போது சுத்த மத்தளமும் தாளமும் இசைக்கப்படுகின்றன. மேலும் சில கோயில்களில் உற்சவ காலத்தில் ஸ்தம்ப பூஜையின் போது மிருதங்கம் வாசிக்கப்படுகின்றது.

தென்னிந்திய ஆலயங்களில் முகவீணை வாசிக்கும் வழக்கம் உண்டு. இது ஒரு துளைக்கருவி ஆகும். நாதஸ்வரத்தை விட சிறிய அமைப்புக் கொண்டது. ஆரம்ப காலத்தில் இக் கருவி கோயிற் கிரியா வேளைகளில் நிருத்திய நிகழ்சியின் போதும் சின்னமேளத்துக்கு

பக்கவாத்தியமாக செல்லும் போது இவ் வாத்தியம் இசைக்கப்படும். தென்னிந்திய வைணவ ஆலயங்களில் இது அதிகம் இசைக்கப்படுகிறது.

மாரியம்மன் கிராமத் தெய்வங்கள் உறையும் ஆலயங்களில் உடுக்கை, டவண்டை, பம்பை முதலிய கருவிகள் இசைக்கப்படும். இலங்கையில் வடபகுதியில் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலிலும், புளியம் பொக்கனை, வற்றாப்பளை, பொறிக்கடவை, புதூர் போன்ற ஆலயங்களிலும், காவற் தேவதைகளின் கோயில்களிலும், வடமராட்சி வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் பறை மேளம் இசைக்கப்படுகிறது. மேலும் மந்திகை கண்ணகி அம்மன் ஆலயம், ஏழாலை கண்ணகி அம்மன் ஆலயம் , ஏழாலை பெரியதம்பிரான் ஆலயம் ,குடத்தனை வடக்கு கண்ணகி அம்மன் ஆலயம், குடத்தனை விநாயகர் ஆலயம் என்பவற்றிலும் இப் பறை மேளம் வாசிக்கும் வழக்கம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் செல்வச்சந்நிதியில் வெளிப்பிரகாரத்திரும் பறையிசை வாசிக்கப்படுகின்றது. அம்மன், விஷ்ணு ஆலயங்களில் தெய்வம் வீதி வலம் வரும் போது பேரிகை இசைக்கப்படுகின்றது. இலங்கையில் நல்லூர் கந்தசாமி ஆலயத்திலும் வழிபாட்டில் பேரிகை இசைக்கப்படுகிறது. இலங்கையில் கிழக்கில் பெரும்பாலான ஆலயங்களில் பறை மேளம், உடுக்கு, சிலம்பு வாத்தியங்கள் வாசிக்கப்படுகின்றன.

இசைக்கருவிகளில் வீணையின் நாத ஒலியானது மனித மனத்தை ஆட்கொண்டு மயக்கியது மட்டுமல்லாது, இறைவனையும் மனம் மகிழச் செய்வதை இன்னும் காணலாம். அதற்கு சான்று திருவரங்கம் ஸ்ரீ ரெங்கநாதன் சன்னிதியில் திருப்பள்ளியெழுச்சி மற்றும் அர்த்த யாம பூஜையின் போது வீணை இசைக்கப்படுவது மரபாகும். இங்கு சித்திரை மாதத்தில் நடைபெறும் பூச்சாற்றுத் திருவிழாவின் போது திருமாலின் முன்பாக குலசேகர ஆழ்வாரின் திருமொழி பாசுரங்கள் வீணையுடன் தான் இசைக்கப்படுகின்றன. ஆழ்வார் திருநகரியில் கல் வீணை காணப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நரம்பிசைக்கருவியாகிய சாரங்கி இன்று வட இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது. முன்பு ஓதுவார்களில் திருமுறைகள் ஓதும்போது பயன்படுத்தினர். நெல்லை மாவட்ட கோயில்களிலும் முன்பு அதிகாலையில் பயன்படுத்தப்பட்டது. வைணவக் கோயிலில் ‘‘அரையர் சேவை’’ எனும் பெயரில் பிரபந்தங்களைப் பாடி ஒரு வகை ஆட்டங்களை ஆடுவர். இதனையே திருவாய் மொழி உற்சவம் என்றழைப்பர். திருவரங்கம், திருவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி என்பவற்றில் இந்த உற்சவ காலங்களில் இச்சாரங்கி பயன்படுத்தப்படுகின்றது.

**முடிவுரை**

‘‘ஆலய வழிபாட்டில் வாத்திய இசைமரபு’’ என்ற தலைப்பில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு ஆலயங்களைக் கருவாகக் கொண்டு அங்கு இடம்பெற்ற

மற்றும் இடம்பெறுகின்ற இசைக்கருவிகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது. இயற்கை தரும் இனிய ஒலிகளைக் கேட்டு கருவியிசை என்னும் அருங்கலை ஒன்றை ஆக்கி அக்கலை மரபை தொடர்ச்சியாகப் பேணிக் காத்தவர்கள் நம் முன்னோர்கள். அவ்வாறு நம் முன்னோர்கள் பயன்படுத்திய இசைக்கருவிகள் மற்றும் நாம் தற்போது ஆலயங்களில் பயன்படுத்துகின்ற இசைக்கருவிகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இன்றும் பாரம்பரிய முறைப்படியே இசைக்கருவிகளை சில ஆலயங்களினூடாக காத்து வருகின்றனர். ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் இன்றும் பாரம்பரிய முறைப்படி திருக்கோயில் நிர்வாகத்தால் 18 வகை சிறப்பு வாத்தியக் கருவிகள் இசைக்கப்படுகின்றன. மேலும் இலங்கையின் நல்லூர் முருகன் ஆலயத்தில் உற்சவ காலங்களில் பல இசைக்கருவிகள் வாசிப்பதனை நாம் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

சிவராத்திரி, நவராத்திரி காலங்களில் ஆலயங்களில் கலைநிகழ்ச்சிகளை அரங்கேற்றுகின்றனர். அங்கு இசைக்கருவிகளின் பங்கு அதிகமாக காணப்படுகின்றது. மேலும் மார்கழித் திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலையிலேயே இறைவன் அடியார்கள் ஆலய வீதிகளில் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை மற்றும் திருவாசகம் பாடுவர். அதன் போது பல இசைக்கருவிகளை இசைப்பர். இதனை இலங்கையின் கிராமப்புறத்தில் அமைந்திருக்கின்ற பல கோயில்களில் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. மேலும் ஆலயங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையின் போதும் சங்கு, சேமக்கலம், உடுக்கு, தாளம் என்பன பயன்படுத்தப்படுவதை நாம் எமது ஊர்களில் உள்ள ஆலயங்களில் காணக்கூடியதாக உள்ளது.

கலைகள் யாவும் ஆலயங்களை ஒட்டியே வளர்ச்சி பெற்றன. இதனை ஆலயங்களில் தினந்தோறும் நடைபெறும் கிரியைகளிலிருந்து அறியமுடிகின்றது. கீதம், நிருத்தியம், வாத்தியம் ஆகிய மூன்றும் ஆலய கிரியைகளின் போது இசைக்கப் பெற்ற இசைச் செல்வங்களாகும். காமிக ஆகமத்தில் இவை பற்றிய உண்மைகளைக் காணலாம்.

அந்தவகையில் இந்த ஆலயவழிபாட்டில் வாத்திய இசைமரபு பற்றிய இவ் ஆய்வின் மூலம் வாத்திய இசைக்கருவிகள் முன்னைய காலத்தினைப் போன்று பல இசைக்கருவிகள் பயன்பாட்டில் இல்லாத போதிலும் இன்று காணக்கூடிய இசை வாத்தியங்கள் மூலம் ஆலய வழிபாட்டில் வாத்திய இசைமரபு பின்பற்றப்படுகின்றது என்பதனை அறியமுடிகின்றது.

## உசாத்துணை

அங்கயற்கண்ணி,இ., மாதவி,இரா., (2005), ‘‘இசையும் பிற நுண்கலைகளும்’’, இசைத்துறை தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சுந்தரம், பி.எம்., (1990), ‘‘ஆலய வழிபாட்டில் இசை’’, தமிழ்ப்பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.